DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.34/2026**
Prosecution Witness P.W.4

| | |
|---|---|
| Name:**திரு. நந்தகுமார்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

**நாள்: 22.06.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் பெரியகுளம் தெற்கு புது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் இருசக்கர வாகன பழுது பார்ப்பவராக என் சிறிய தகப்பனாரிடம் வேலை செய்து வருகிறேன்.சாட்சிகள் கார்த்திகேயன், முத்துக் காமாட்சி, தணிகைவேல் ஆகியோரை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரி முத்தையாவை எனக்கு தெரியும். 11.08.2025ம் தேதியன்று, நான் என் வீட்டில் இருந்தேன் அப்போது பாண்டியா என்பவர் இறந்து விட்டதாக தகவல் எனக்கு கிடைத்தது.

2. நான் இறந்த நபரின் வீட்டிற்கு துக்கத்திற்கு சென்றேன். நான் அங்கு சென்று பார்த்தபோது அவரது சாவில் மர்மம் இருப்பதாக யாரோ தகவல் சொல்லி போலீசார் அங்கு வந்தார்கள். அதன் பின்பு இறந்து போனவர் உடலை உடன் கூராய்வு செய்யப்பட்டது. இறந்து போன நபரின் உடல் பரிசோதனைக்கு பின்னர் சுடுகாட்டில் தகனம் செய்யப்பட்டது. அடக்கம் முடிந்த பிறகு நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம்.

3. அன்றைய தினமே இரவு 10.00 மணிக்கு அவர் இறந்தது சம்பந்தமாக ஊரில் கூட்டம் கூட்டினார்கள். அந்தக் கூட்டமானது மறவர் மண்டபத்தில் கூட்டப்பட்டது. அந்த கூட்டத்திற்கு ஊர் பெரியவர்களுடன் நான், கார்த்திகேயன், முத்து காமாட்சி, தணிகைவேல் ஆகியோரும் சென்றோம். ஊர் பெரியவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது எனக்கு வீட்டில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது, அதனால் நான் கிளம்பி சென்று விட்டேன். நான் சாப்பிட்டு விட்டு 15 நிமிடங்கள் கழித்து வந்தேன்.

4. நான் போய் பார்த்தபோது மறவர் மண்டபத்திற்கு வெளியே சத்தம் போட்டு கொண்டு இருந்தார்கள். அங்கு போய் பார்த்தபோது துளசியை யாரோ குத்தி விட்டார்கள் என்று கேள்விப்பட்டேன், அங்கு இருப்பவர்களை விசாரித்த போது முத்தையா மற்றும் தங்கபாண்டி ஆகியோர்கள் குத்திவிட்டதாக மாற்றி, மாற்றி சொன்னார்கள். அதனால் என்னால் உறுதியாக சொல்ல முடியவில்லை. அதன்பின்பு காயம் பட்ட துளசியை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். நானும் என் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் அவர் இறந்து விட்டதாக சொன்னார்கள். புகார் கொடுப்பதற்காக கார்த்திகேயன் சென்றார், நான் வந்து விட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனது வீடானது தேவர் சிலைக்கு அருகிலுள்ள புது மறவர் சங்கத்திற்கு அடுத்த சந்தில் உள்ளது. கூட்டம் நடந்ததாக சொல்லும் மறவர் சங்கமானது மூன்று சந்துக்கள் தாண்டி அமைந்துள்ளது. எனக்கு கூட்டம் நடந்த விபரம் பற்றி தெரியும். நான் கூட்டத்தில் கலந்து கொண்டேன். கூட்டத்தில் எனது

நண்பர்கள் தணிகைவேல், கார்த்திகேயன், முத்துக்காமாட்சி ஆகியோர் இருந்தனர் என்றால் சரிதான்.

2. பாண்டியா இறப்பு சம்பந்தமாக யார் போலிசாரிடம் தகவல் சொன்னார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த கூட்டத்தில் துளசிமணிக்கும், முத்தையாவிற்கும் சண்டை நடந்த விபரம் பற்றி எனக்கு தெரியாது, அதற்கு முன்பே நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் மன்றத்திலிருந்து வீட்டிற்கு செல்லும் போது 10.30 மணியிருக்கும். சம்பவம் நடந்த அன்று முத்தையாவும், தங்கபாண்டியும் துளசிமணியை கொன்ற விபரத்தை நான் கண்ணால் பார்த்ததாக போலீசார் என்னை விசாரிக்கும்போது சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்திற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் போய் பார்க்கும் போது துளசிமணியை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள், அவர் அங்கு இல்லை. போலிசார் விசாரணையில் தற்போது கூறியுள்ளது போல் தான் சொல்லியுள்ளேன்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd/-A.Saravanakumar
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.